DJRD-4-TA

# இயேசு மரணத்தில் இருந்து உயிரத்தாரா? நிகழ்ச்சி 4

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு உலக பிரசித்திபெற்ற முன்னணி சித்தாந்த நாத்திகரான Dr. ஆண்டனி ப்ளூ மற்றும் ஆக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தின் முன்னாள் பேராசிரியரும் கிறிஸ்தவ சிந்தாந்தமேதையும் வரலாற்றாலருமான Dr. கேரி ஹேபர்மசுக்கும் இடையிலான விவாதத்தை பார்க்கும்படி உங்களை வரவேற்கிறோம், இவர் தற்போது லிபர்டி பல்கலைகழகத்தில் சித்தாந்தத்தின் பிரிவினுடைய தலைவராக இருக்கிறார், இன்றைய தலைப்பு, “இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தாரா?”

**Dr. கேரி ஹேபர்மாஸ்** தேவன் இருக்கிறார் என்பதை பற்றி சிறந்த விவாதங்கள் இருந்தாலும் தேவன் தான் வசனங்களை எழுதும்படி செய்தார் என்பதற்கும் ஆதாரம் இருக்கிறது, அவர் நேர்த்தியான நேரத்தில் செயல்படுவதற்கும் ஆதாரம் உள்ளது, இயேசு அற்புதங்களை செய்தார் என்றால், அவர் நிச்சயம் மரணத்தில் இருந்தும் உயிர்த்திருக்கிறார். இன்றைக்கு டபிள் பிளைன்ட் ஆய்வுகளின் காரியங்களை பார்க்கும்போது அவை ஜெபங்களுக்கான பதில் என்ற மருத்துவ பத்திரிக்கையின் வெளியீடுகளில், 26 ரகங்களில் சுமார் 21 நபர்கள் சிறப்பாக இருக்கிறார்கள். அதில் சில சுகமளிக்கும் உதாரணங்களும் இருக்கிறது நமக்கு நேரம் இருந்தால் அதையும் பார்த்திடலாம். மரண தருவாயின் அனுபவங்கள்; மேலும் உயிர்த்தெழுதலை குறித்த ஆதாரங்களை பற்றி நாம் பேசிட இருக்கிறோம். கிறிஸ்தவர்களின் கருத்து என்னவென்றால், உயிர்த்தெழுதல் என்பது தனித்த ஒன்றல்ல. மிகப்பெரிய சம்பவத்தை சொல்கிறது, தெய்வங்களை குறித்த உலகத்தின் கண்ணோட்டம் என்றும் சொல்ல முடியும்.

**அறிவிப்பாளர்:** கிறிஸ்துவம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் தான் நிலை நிற்கிறது. கிறிஸ்து மரணத்தில் இருந்து உயிர்த்திருந்தால், கிறிஸ்தவம் உண்மையானதாக இருக்கும். அப்படி இல்லாவிட்டார், கிறிஸ்தவம் பொய்யாக இருக்கும். அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால், உங்கள் விசுவாசம் விருதாவாய் இருக்கும், உங்கள் பிரசங்கமும் வீணாயிருக்கும், நீங்க உங்கள் பாவங்களிலேயே தரித்திருப்பீர்கள். ஜான் அங்கேர்பெர்க் நிகழ்ச்சியின் இந்த மிக முக்கிய விவாதத்திற்கு உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

***

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நாம் உலகின் பிரசித்தி பெற்ற இரண்டு சித்தாந்த வல்லுனர்களுடன் பேசிக்கொண்டு இருக்கிறோம் சித்தாந்தத்தில் பட்டப்படிப்பு முடித்த ஒவ்வொருவருக்கும் இவர்களை நிச்சயம் தெரிந்திருக்கும், முதலாவதாக Dr. ஆண்டனி ப்ளூ. இவர் உலகின் பிரசித்தி பெற்ற நாத்திக சித்தாந்தமேதை. அடுத்து Dr. கேரி ஹேபர்மஸ், இவர் பிரசித்திபெற்ற கிறிஸ்தவ சித்தாந்தவாதி மற்றும் வரலாற்றாளர், இயேசுவின் உயிர்த்தெழுதலை குறித்த ஆதாரங்களை நேர்த்தியாக எடுத்து சொல்வதில் திறமையுடையவர்.

நாம் பார்த்துகொண்டிருக்கும் கேள்வி என்னவென்றால்: இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தாரா? அதற்கு ஆதாரங்கள் இருக்கிறதா? இதில் முக்கியமான காரியம் என்னவென்றால், ஜென்டில்மேன், இப்ப நாம பேச வேண்டிய காரியம் இதுதான் பவுல் என்ற மனிதன் கிறிஸ்தவர்களை கொலை செய்யும்படி அவர்கள் பின்னாக இருந்தவனுக்கு, என்ன நடந்தது. விசுவாசிக்கும் மனநிலையில் அவன் இல்லை, அதை நம்ப முன்வரவும் இல்லை, அவங்க சொல்வது தவறு என்று சொல்லிகொண்டிருந்தான். திடீரென்று, இவர் கிறிஸ்தவ விசுவாசத்தை மிகவும் வைராக்கியமாக எடுத்துசொல்லும் ஒருவராக மாறிவிட்டார். சரி, இங்க ஏதோ நடந்திருக்குது. டோனி, நீங்க சொல்லுங்க. பவுலுக்கு என்ன நடந்திருக்குன்னு நினைகிறீங்க?

**Dr. ஆண்டனி பிழு** சரி, அவனோடு வேறு சில மனிதர்களும் இருந்தாங்கன்னு அங்க சொல்லப்பட்டு இருக்குது, தமஸ்குவுக்கு போகிற வழியில் தற்செயலாக திடீருன்னு அவனுக்கு பார்வை போன பிறகு இவங்கதான் அவனை கைத்தாங்கலாக நடத்தி கொண்டு போனாங்க. இவன் என்ன நினைத்தான் என்றால் உயிர்த்தெழுந்த இயேசு, கிறிஸ்துவானவர், மேசியா, அவரை பார்த்ததாகவும் மேசியா அவனோடு பேசியதாகவும் நினைத்தான். ஆனா அவனோடு இருந்த மனிதர்கள், எல்லாரும், சத்தத்த கேட்டார்கள்... அப்படிதான் இருக்கிறது அவன் கேட்ட சத்தத்தை சிலர் கேட்காமலும் இருந்திருக்கலாம். ஆனா அவங்க அங்க எதையோ பார்த்தார்கள் என்றும் அதினால் தூரமாக போய் விழுந்தார்கள் என்றும் சொல்லமுடியாது, அவங்க எந்த மனிதனையும் அல்லது அசாதாரணமான ஒருவரையோ அங்க பார்க்கல.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். சரி கேரி, நீங்க உங்க நண்பருக்கு என்ன சொல்ல விரும்புறீங்க?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** இங்க பவுலுக்கு இருந்த பிரச்சனையை பற்றி அவர் சரியா தான் சொல்லியிருக்கிறார். பவுல் தன்னை குறித்து சொல்லியிருக்கிற பதிவுகளை பார்க்கும்போது பல இடங்களில்- 1 கொரிந்தியர் 9:1; 1 கொரிந்தியர் 15:8; கலாத்தியர் 1 – இயேசுவை கண்டதாக கூறியிருக்கிறார். ஆனா இவர் கேண்டின் கொள்கை படி சொல்லவில்லை என்று நினைக்கிறேன், இவர் மன கோளாறு உடைய ஒரு நபர் அல்ல என்று சொல்லிடுவேன், ஏன்னா நா சொன்னமாதிரி, மன கோளாறுக்கும் மன பிரமிக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. அதனால பவுலுக்கு மன கோளாறு இருந்துதுன்னு சொல்ல முடியாது; இரண்டாவதாக, ஒலி பிரம்மை என்பது ஏன்னா அவர் ஒரு சத்தத்தை கேட்டதாக நினைத்தார். மூன்றாவது, தரிசன பிரம்மை; நான்காவது, மேசியா காம்ப்ளக்ஸ் என்பதாகும் – பார்த்தது போன்ற உறுதி, அதாவது, தேவன் தம்மிடம் பேசியதாகவும் உலகத்திற்கு ஒரு செய்தியை சொல்லும்படி ஏற்படுத்தியதாகவும் நம்பினார். ஐந்தாவது, பவுலினுடைய பதிவுகளில் மாறவேண்டும் என்று மன நிலையில் பவுல் இருந்தார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை, அப்படியென்றால் ஏன் மாறும்படி நினைத்தார்.

என்னை பொறுத்தவரையில், இங்க நான்கு மன நிலை பிரட்சனைகள் காணபடுகிறது அதோடு பவுலின் பதிவுகளில் வேதாகம ரீதியான பிரச்சனை தோன்றுகிறது. எப்படி கென்ட் சொன்ன அந்த மனநிலை கோளாறை மாற்ற முடியும் என யோசிக்கிறேன் – உங்களோட கொள்கை – அதை எப்படி மாற்ற முடியும் ஒன்றாக்க முடியும், ஒருவேளை,

அதனை  தரிசன பிரம்மையும் ஒலி பிரம்மையும் சேர்ந்து மனநிலை கோளாறுடன் கலந்து காட்சி வடிவம் எடுத்து அது மேசியாதான் என்று நம்பும்படி செய்ததா. இதெல்லாம் ஒரே நேரத்தில் நடக்குமா.

**Dr. ஆண்டனி பிழு** பெரும்பாலான நேரங்களில் நா இயற்கையின் கொள்கை படியோ மற்ற விளக்கத்தையோ சொல்ல விரும்புவதில்லை. இங்க உண்மையா என்ன நடக்குதுன்றத நான் பார்க்கவும் தெயர்ந்துகொள்ளவும் விரும்புகிறேன்....

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஆனா இது இயற்கையின் கொள்கை இல்லையே.

**Dr. ஆண்டனி பிழு** சரி, அதற்கு சாத்தியம் இருக்கிறது. அதுல ஏதாவது தவறாக இருந்திருக்கலாம். மனநிலை கோளாறு என்றால் என்ன என்று தெரிந்துகொண்ட மனநல நிபுணராக என்னை காண்பிக்க விரும்பவில்லை. நா வில்லியம் ஜேம்ஸ் மற்றம் சிலருடைய கட்டுரைகளை படித்திருக்கிறேன்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** கென்ட் சொல்லும் இரண்டு காரியங்கள் இதுதான்... அது பொறுத்தமாக இருக்காது என்று சொல்லுகிறேன். அவருக்கு மனநல கோளாறு இருந்தாலும், அவரால இதனால் கேட்க முடியும், பார்க்க முடியும், தேவன் ஒரு செய்தியை சொன்னார் என்று சொல்ல முடியும் என்பது சாத்தியமில்லை.

**Dr. ஆண்டனி பிழு** ஓ, இல்ல. சரி. ஒரு விளக்கமாக இந்த மனநல கோளாறு என்ற பாயிண்ட எடுக்க முடியாததற்கு காரன் இருக்குது. அதை பற்றி எனக்கு எந்த கவலையும் இல்லை. அதாவது, இது கேண்டுடைய கருத்துதான்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** நீங்க அதை விட்டு கொடுக்கல இல்ல.

**Dr. ஆண்டனி பிழு** இல்ல. நா என்ன கேட்க்க விரும்புகிறேன் என்றால் உண்மையில் பவுல் என்னத்தை  பார்த்தார்.  அவர் தான் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை பார்த்ததாக நினைக்கிறார். ஆனா அங்க பார்க்கும்படியாக இருந்தது என்ன அவனோடு கூட இருந்தவர்கள் கிறிஸ்துவையோ வேறெந்த உருவத்தையோ அங்க பார்க்காதது ஏன் பவுல் இப்படி மருரூபமாகும் அனுபவத்தை பெறும்படி அங்க முக்கியமானதாக காணப்பட்டது என்னது.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அப்போஸ்தலரின் பதிவுகளை பார்க்கும்போது, அப்போஸ்தலர் 9:22மற்றும் 26, ஒரு வெளிச்சத்தை கண்டார்கள். அவனோடு இருந்தவர்கள் ஒரு வெளிச்சத்தை கண்டார்கள். அவர்கள் எல்லாரும்ம் முகங்குப்புற விழுந்தார்கள். அவர்கள் ஒரு சத்தத்தை கேட்டார்கள் ஆனால் சத்தத்தின் உச்சரிப்புகளை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவங்க அங்க சும்மா நின்னுட்டு இருந்தாங்க எதையும் பார்க்கவில்லை என்ற உங்களுடைய கருத்திற்கு நான் இணங்கி போகவில்லை என்பதை ஜனங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். அவங்க வெளிச்சத்தை பார்த்தார்கள், சத்தத்தை கேட்டார்கள், அவர்கள் தையிலே விழுந்தார்கள். அப்படின்னா அங்க அவங்களுடைய செய்கைக்கான ஒரு விஷயம் நடந்திருக்கிறது, என்றிடலாம், சரி, இது இப்ப, மனநல கோளாறு என்பதற்கு கூடுதல் குழப்பத்தை கொடுக்கிறது. ஏன்னா பவுலுக்கு மன நல கோளாறு இருந்திருந்தா, அவனோடு கூட இருந்தவங்க எதுக்காக கீழ விழனும் எப்படி, வெளிச்சத்தை பார்க்க முடியும், எப்படி சத்தத்தை கேட்க முடியும்?

**Dr. ஆண்டனி பிழு** சரி, சரி, சரி. நா என்னை மன நல நிபுணர் என்று சொல்லிக்கொள்ள விரும்பல. சரியா, மனநல கோளாறு இல்லைன்னு வைத்துகொள்வோம், இருந்தாலும், உங்களுடைய வாழ்கையை ஒரு விஷயம் மாற்றியது என்று சொல்ல முடியுமா....

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அதுதான் சரி.

**Dr. ஆண்டனி பிழு** சரி, இருக்கட்டும் , இதை ஏற்றுகொள்கிறோம். ஆனா இது ரொம்ப அநியாயம். அங்க என்ன நடந்தது என்பதை படம் பிடிக்கும் கேமராக்கள் அங்க இல்ல, அங்க இதுதான் நடந்ததுன்னு சொல்ல எந்த காரணமும் இல்லை, இருந்தாலும், தேவன் பவுலோடு இடைபட போகிறார் என்பதை விருவாசிக்கும்படியான காரணங்கள் நமக்கு இருக்கிறது என்று சொல்ல முடியுமா.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** பிலிப்பியர் மூன்றாம் அதிகாரத்தை பாருங்க. பிலிப்பியர் மூன்றாம் அதிகாரத்தில் இந்த மூன்று விவாதங்களும் இருக்கிறது இது மாம்ச சரீரம் என்று பவுல் நினைத்தார்.

**Dr. ஆண்டனி பிழு** சரி. இருக்கட்டும். அவர் அப்படி நினைக்கலாம், இருந்தாலும்....

**Dr. கேரி ஹேபர்மாஸ்** இதுதான் சரி.

**Dr. ஆண்டனி பிழு** இருந்தாலும் அவன் அப்படி யோசித்ததால அப்படி ஒரு உருவம் காணப்பட்டது என்று சொல்ல இது காரணமாக இருக்க முடியாது.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஆமா, இருந்தாலும், நீங்களே சொன்னீங்க பவுல் தாம் ஒரு ஆவிக்குரிய, அதாவது இயேசுவை போல ஒரு ஆவி மனிதனை பார்ஹ்த்தான் என்று, அப்ப பவுல் ஒரு சரீரத்தை பார்த்தார் என்பது தெளிவாக புரிகிறது. அவன் ஒரு சரீரத்தை பார்த்ததாக நினைத்தார், அப்போஸ்தலரில் சொல்லப்பட்டதை பார்க்கும்போது, அவனோடு இருந்தவர்கள் தரையிலே விழுந்தார்கள் என்று இருக்கிறது, வெளிச்சத்தை பார்த்தாங்க, அந்த சத்தத்தை கேட்டாங்க. இது மனநல கோளாறினால் உண்டானதல்ல. அப்ப இந்த மனநல கோளாறு என்னும் கருத்தை விட்டுடுறீங்களா?

**Dr. ஆண்டனி பிழு** எனக்கு கவலை இல்லை. அதை விட்டுவிடுவதில் சந்தோஷப்படுகிறேன். அதையே நான் பிடித்து கொண்டு இருப்பது கிடையாது. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், அங்க அவங்க குறிப்பாக எந்த காரியத்தையும் பார்க்க வில்லை. எப்படி அவனுக்கு அது உண்டானது, அதாவது, அது மன நலம் சம்பந்தமான ஒன்றாக இருக்கிறது அதனால, நன்றி சொல்றேன், ஆனா நா அப்படி இல்லை.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** இது மன நல கோளாறு இல்லை என்று சொன்னா, என்னோடு கேள்வியை நா உங்க பக்கமா திருப்புகிறேன். அது மன நல கோளாறாக இல்லை என்றால், அவன் இயேசுவை பார்க்கவில்லையா, அப்படின்னா அவனும் அவனோடிருந்தவர்களும் என்னத்தை பார்த்தார்கள்? எல்லாரும் ஏன் தறியிலே விழுந்தார்கள்? தமஸ்குவுக்கு போகிற வழியில் என்ன நடந்தது? அது மன பிரம்மையும் இல்லை உயிர்த்தெழுதலும் இல்லை என்றால், அது என்னது?

**Dr. ஆண்டனி பிழூ** அவனோடு கூட இருந்தவங்களால பார்க்க முடியலைன்னு சொன்னா, அது மாம்ச சரீரமாக இருக்க முடியாது.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அவனோடு இருந்தவங்களால பார்க்க முடியலைன்னு சொன்னது யாரு. அதாவது, அவங்க வெளிச்சத்தை பார்த்தாங்க, தரையிலே விழுந்தார்கள், சத்தத்தை கேட்டார்கள்.

**Dr. ஆண்டனி பிழூ** அது மட்டும்தான் சொல்லப்பட்டு இருக்குது.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** இதை வேற விதமாக சொல்லுகிறேன். சித்தாந்த ரீதியாக, உங்களுக்கே தெரியும், மாறுபாடுகள் என்பது, இரண்டு விஷயங்கள் ஒரே மாதிரி இருக்க முடியாது இல்லாம இருக்கவும் முடியாது, ஒரே இடம், ஒரே நேரம், ஒரே மாதிரி இருக்காது. அவ்வர்கள் பார்த்தார்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது ஆனா அவங்க பார்க்கலைன்னு நமக்கு சொல்லப்பட்டு இருக்கிறது. ஒருவேளை அங்க அவங்களுக்கு முன்னால மாம்ச சரீரம் காணப்பட்டு இருக்கலாம். அங்க எதுவுமே இல்லை என்று நமக்கு சொல்லப்படவில்லை. யாருமே அங்க இல்லை என்று எந்த இடத்திலும் நமக்கு சொல்லப்படவில்லை. மேலும் பிலிப்பியர் 3ம் அதிகாரத்தில் அவருக்கு சரீரம் உண்டென்று சொல்லுகிறார். பவுலுடைய பதிவுகள் மட்டும்தான் இருக்கிறது, இல்லையா? வேறு எந்த ஆதாரங்களும் இல்லை.

**Dr. ஆண்டனி பிழூ** ஆமா.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** பவுலோடது மட்டும்தான் இருக்குது அது மாம்ச சரீரமாக இருந்தது என்றுதான் பவுல் நினைக்கிறார். அதனாலதான், இதுல ஒரு பிரச்சனை உண்டாகிறது. நம்முடைய நான்கு உண்மைகளில் ஒன்று: பவுல் உயிர்த்த்ழுந்த இயேசுவின் சரீரத்தை கண்டதாக விசுவாசித்தார். அது பிரம்மையாக இல்லையென்றால், வேற என்னன்னு சொல்றது?

**Dr. ஆண்டனி பிழூ** ஆனா சுவிசேஷங்கள் முழுவதிலும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை கண்டதாக விசுவாசித்த எல்லாரும் இப்படிதான் யோசித்திருப்பார்கள் என்று நன்றாக புரிகிறது, அப்படித்தான. இவங்க ஒரே ஒரு விஷயத்தைதான் கவனிக்க முயலுகிறார்கள் மற்றவர்களோடு ஒப்பிடும்போது சிறி குழுவாக இருப்பவர்களுக்கு இப்படி வெளியரங்கமாக பார்க்க முடிவது சாத்தியமாகுமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், நாம திரும்ப வந்ததும் மற்ற சின்ன சின்ன குழுக்களை பற்றி பார்க்க லாம் என்று நினைக்கிறேன். மற்றவர்களை பற்றி சொன்னோமே அவர்கள் என்ன ஆனார்கள். அவங்களுக்கு என்ன நடந்தது? அதை பற்றி இன்னும் சில நிமிடங்களில் பார்க்கலாம்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் இப்போது Dr. ஆண்டனி ப்ளூவிடம் பேசிக்கொண்டு இருக்கிறோம், உலக பிரசித்திபெற்ற சித்தாந்த நாத்திகராக கருதபப்டுகிறவர், Dr. கேரி ஹாபர்மஸ், பிரசித்திபெற்ற கிறிஸ்தவ சித்தாந்தமேதை மற்றும் வரலாற்றாளர். இயேசுவின் உயிர்த்தெழுதலை குறித்த ஆவணங்களை

நேர்த்தியாக சமர்ப்பிப்பதில் கைதேர்ந்தவர். இருவரும் நம்மத்தியில் இருக்கிறார்கள். இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தாரா என்பதை பற்றிதான் நாம் பார்த்துகொண்டு இருக்கிறோம். அப்படியானால், எந்த மாதிரியான சரீரத்தோடு அவர் உயிர்த்தெழுந்தார்? அதை பற்றிதான் இப்போது பார்த்துகொண்டு இருக்கிறோம். சீஷர்கள் என்ன பார்த்தார்கள்? பவுலை குரித்ஹ்டு பார்த்தோம். இன்னும் பேதுரு இருக்கார், யாக்கோபு இருக்கார், தோமா இருக்கார், ஸ்திரீகள் இருக்காங்க. இப்ப சொன்ன மற்றவர்களை பற்றியும் பார்க்கணும். எங்கிருந்து நேனேக ஆரம்பிக்க விரும்புறீங்க?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, அவர் மத்தேயுவில் ஸ்திரீகள் இயேசுவை தொட்டதாக சொல்லப்பட்டதை சொல்லியிருக்கிறார், யோவானில் மரியாள் மட்டும் இயேசுவை தொட முற்படுகிறார். தோமா இவர் கிட்டதட்ட ரொம்ப நெருக்கமாக இருப்பதாக சொல்லப்படுகிறார், இக்னேஷியஸ் இப்படியாக சொல்லுகிறார். அதே கேள்வியை நானும் கேட்க்கிறேன்: சீஷர்கள் மன மிரம்மை என்பதற்கு சிறந்த உதாரனமானவர்களா அலல்து உண்மையாகவே இயேசுவை போல இருந்த ஒருவரை அவர்கள் தத்ரூபமாக தொட்டார்களா? இங்க மறுபடியும் மன பிரம்மை என்ற ஒன்று வருகிறது.

**Dr. ஆண்டனி பிழூ** சரி, இவங்க தத்ரூபமாக பார்த்ததாக சொல்லப்படுகிற கூட்டமாக இருக்கிறார்கள், மொத்தமாக பார்த்தால் ரொம்ப குறைவானவர்கள்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** காலம் சமயங்களுக்கு உட்பட்டிருக்கும் ஒருவரை பொதுவாக எத்தனை முறை தொடவேண்டி இருக்கும்?

**Dr. ஆண்டனி பிழூ** ரொம்ப தடவைகள் தேவையில்லை.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஒரு முறை போதும், இல்லையா?

**Dr. ஆண்டனி பிழூ** ஓ, போதும். ஆனா இதை பார்க்கும்போது, உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்ததாக சொல்லப்பட்டிருக்கிற எல்லாரும் ரொம்ப குறைவான எண்ணிக்கையினர் நாம சொன்னது போல இவங்க உண்மையாகவே அங்க ஏதோவொரு உருவத்தை பார்த்தார்களா இல்லையா என்பதை தெரிந்துகொள்ளும்படி விரும்புகிறோம்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** நிச்சயமா, அப்ப, யாரும் இயேசுவை தொட்டு பார்த்திருக்க அவசியமில்லையே.

**Dr. ஆண்டனி பிழூ** ஓ, இல்ல.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** நா உங்கள தொடலன்னாலும் நீங்க இந்த அறையில் இருப்பது உண்மைதான் இல்லையா.

**Dr. ஆண்டனி பிழூ** ஆ, ஆமா.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அப்ப, ஸ்திரீகள் இயேசுவை தொட்டார்கள் என்று சொல்கிறோம்; மரியாள் இயேசுவை தொட்டாள், சுவிசேஷங்களில் தோமாவிற்கும் இயேசுவை தொடுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைகிறது என்று பார்க்கிறோம். மேலும் பவுலினுடைய பதிவுகளில் கூட, அதாவது, பிலிப்பியர் நம் அதிகாரம். இயேசு சரீரத்தில் கானபப்ட்டார் என்று பவுல் நினைத்தார், அது பவுலினுடைய மனமாற்றத்திற்கு உதவியது. என்னை பொருத்தவரைக்கும், உங்களுக்கு, இரண்டு விதமான தடுமாற்றங்கள் இருந்துட்டே

இருக்குது. சீஷர்களை பொறுத்தவரை, நீங்க அதை மனபிரம்மை என்கிறீர்கள் ஏன்னா அவங்க எதையோ பார்த்ததாக நம்பினார்கள். கென்ட் சொல்கிறார் ஹேபர்மசின் உண்மைகள் சரிதான் ஆனா நா அதை மனபிரம்மை என்று நினைக்கிறேன். இன்னும் சீஷர்களுக்கு மன பிரம்மை உண்டானது என்று நினைக்கிறீர்களா?

**Dr. ஆண்டனி பிழு** அது எது பொருத்தமாக இருக்குன்னு எனக்கு தெரியல. என்னை பொறுத்தவரை சிக்கலாக இருக்காது என்னவென்றால் உண்மையாகவே அங்க ஏதாவது தோன்றினதா, அல்லது அது வெறும் பிரமையா, அல்லது அதை தரிசனம் என்கிறீர்களா மன பிரமை என்கிறீர்களா எதுவானாலும் சரி. எனக்கு புரியாத ஒரே காரியம் அங்க ஏதாவது தோன்றியிருக்க வாய்ப்பு இருக்கிறதா. உண்மையா அதற்கான ஆதாரங்கள் பெலகீனமானவைகள் என்று நான் நினைக்கிறேன்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** பவுலும் மற்றவர்களும் தங்களுக்கு உண்டான அனுபவங்களில் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்ததாக விசுவாசித்தனர் என்று சீஷர்களே சொல்லியிருக்கிறார். சரியா?

**Dr. ஆண்டனி பிழு** ஆமா.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** மேலும் காலியான கல்லறையும் நம்மத்தியில் இருக்கிறது. அப்படின்னா மாம்ச சரீரத்தில் ஏதோ நடந்திருக்கணும். சில பகுதிகள் மட்டும்தான் அவர்கள் இயேசுவை தொட்டதாக கூறுகிறது. இது எல்லாமே மாம்ச சரீரத்தின் இடைபாட்டை குறித்து கூறுகிறது. அவங்களுக்கு இவரை தெஇர்யும். மூன்று வருடங்களாக அவரோடு கூட இருந்தவர்கள். அவர் அவர்களுடைய நெருங்கிய நண்பர். சில இடங்களில் அவர் இவர்களுடைய உறவினராக இருக்கிறார், அவர்களுடைய சகோதரர். அவர்களுடைய குமாரன். இதுக்கு மேல வேற என்ன வேணும்? இன்னும் மன பிரம்மையை முன்வைக்க விரும்புகிறீர்களா, உண்மையா?

**Dr. ஆண்டனி பிழு** அதுமட்டுமில்ல அவங்க எல்லாரும், உதாரணமாக, அவருயிர்த்தேழுந்த கிறிஸ்து என்று தெரியாமல் சிலர் அவரோடு கூட நெடுந்தூரம் நடந்து போயிருக்காங்க.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அது நல்ல பாய்ன்ட் நா உங்கள பார்த்து பதினைந்து வருடங்களாச்சு இருந்தாலும் நேற்று ஹோட்டல்ல உங்கள பார்த்ததும் அடையாளம் தெரிஞ்சுகிட்டேன். ஆனா சில மாற்றங்கள் இருக்குது என்கிட்டயும் இந்த பதினைந்து வருடங்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டு இருக்குது. அதாவது, ஒரு சில எளிமையான, வெளிப்படையான மாற்றங்கள் உயிர்த்தெழுந்த சரீரத்தில் இருந்தால் – நிச்சயம் இருக்கும் என்று நினைக்கிறேன் – அது மட்டும் போதுமானதாகும். யாரையாவது ரொம்ப நாள் கழித்து பார்க்கும்போது என்ன சொல்வோம் என்று நினைவிருக்கிறதா, “நீங்க அவ்னகதான்? அதனாலதான் பவுல் இப்படி சொல்லியிருப்பாருன்னு நினைக்கிறன், “ஆவிக்குரிய சரீரம்.” அது உண்மையான சரீரம் தான், அது காலங்கள் சமயங்களுக்கு உட்பட்டதும் தொட கூடியதுமாக இருந்திருக்கும். ஆனாலும் சில மாற்றங்களிருக்கும். அதனால அவர் கொஞ்சம் வித்தியாசமாக இருந்தார் என்று சொல்லப்படும் பகுதிகளுக்கு பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நா ஒன்னு சொல்லட்டுமா, இன்னொரு உண்மையான சம்பவம் சுவாரஸ்யமானது என்னதெரியுமா இறை நம்பிக்கையற்றவர் கூடவே இருப்பது, இயேசுவின் சொந்த வாழ்கையில் அவரை நம்பாத ஒருவர் இருந்தார், அவருடைய சகோதரன், ஒருமுறை இயேசு எருசலேமிற்கு போய் அங்க கொல்லப்படவேண்டும் என்று ரொம்ப ஆர்வமாக இருந்தவர், கொடூரமாக கொல்லப்படனுன்னு நினைத்தார். திடீரென்று இவர் எருசலேமின் சபைக்கு தலைவராக மாறினார். இப்ப, இயேசு இந்த பூமியில் இருந்த காலத்தில் அவரை நம்பாமல் இருந்தவர் இவர். இந்த யாக்கோபுக்கு என்ன நடந்தது, டோனி?

**Dr. ஆண்டனி பிழு** எனக்கு தெரியாது? நா எதுக்காக தெரிஞ்சுக்கனுன்னு நினைக்கிறீங்க? தேதி தெரியாத காலத்தில் எருசலேமில் என்ன நடந்திருக்கும் என்று தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் என்ன?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இது எப்படி இருக்கு தெரியுமா நீதிமன்றத்திற்குள் சென்று ஹேபர்மச பார்த்து கேட்கிறீங்க, “உங்க பத்து சாட்சிகளாய் தவிர, உங்ககிட்ட வேறு ஒன்றுமில்லையா, ஹேபர்மஸ்!

**Dr. ஆண்டனி பிழு** ஓ, இல்லை. அவர்கிட்ட நிறைய இருக்குன்னு நினைக்கிறேன். அங்க நடந்ததை பார்த்தோம் என்று சொல்லுகிற இவர்களை தவிர வேற சாட்சிகளையும் வச்சிருக்கிறார் உண்மையா என்ன நடந்துதுன்னு சொல் ஆவரால முடியுன்னு நினைக்கிறன். உயிர்த்தெழுந்தவரை கண்டவர்களில் தோமாவின் சாட்சி நெகிழ வைக்கும் ஒன்றாக இருக்கிறது.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அவர உங்களுக்கு பிடிக்கும், சரியா.

**Dr. ஆண்டனி பிழு** ஆமா, பிடிக்கும், ஏன்னா அவன் நம்பிக்கை இல்லாதவர்கள் செய்யும் வேலையை எந்தவித தயக்கமும் இல்லாம எல்லாருக்கும் பொருந்தும் விதமாக செயல்படுவதை பார்க்கிறேன்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** யோவான் என்ன சொல்ல வர்றாருன்னு எனக்கு புரியுது, உயிர்த்தெழுதலை நிருபிக்கும் ஆதாரங்களுக்கு இதையும் அவர் மேருகேற்றிட வைக்கிறார். இங்க ஒரு கூட்ட பெண்கள் இருக்காங்க. தனியாக இருக்கும் பெண்ணும் இருக்கிறாள், மகதலேனா மரியாள். ஒரு குழுவான ஆண்கள் இருக்காங்க, தனியான ஒரு ஆணும் இருக்கிறார், யாக்கோபு, அதை 1 கொரிந்தியர் 15:7ல பார்க்கிறோம் பவுல் யாக்கோபை குறித்து சாட்சிகொடுக்கிறார். இப்ப யாக்கோபு இயேசுவை நம்பாதவர் கிடையாது. இயேசுவை கண்டதாக அவரும் விசுவாசிக்கிறார். அடுத்து பவுல் இருக்கிறார். அதோடு கூட காலியான கல்லறையும் இருக்கிறது.

ஒரு அடுக்குக்கு மேல இன்னொன்னு அதுக்கு மேல இன்னொண்ணுன்னு நிறையா இருக்குது. அதனாலதான் கிறிஸ்தவர்கள் நிறைய ஆதாரங்கள இருக்கிறதென்று தைரியமாக சொல்லுகிறார்கள் என நினைக்கிறேன். அப்படி சொல்லீட்டு இருக்கும்போது இறை நம்பிக்கையில்லாதவர்கள் கேட்ப்பாங்க, “சரி, இதுக்கு என்ன சொல்றீங்க? அப்ப நீங்க, “அப்ப பவுல் என்ன சொல்றாரு? யாக்கோபு என்ன சொல்றாரு என்பீர்கள். ஆதாரங்கள் பல கோணங்களில் இருந்து வெளிபடுவதாக இருக்கிறது. உங்களுக்கு

தெரியுமா, ஒரு வரலாற்றாளராக, வரலாற்று வல்லுநர்கள் இதைதான் செய்கிறார்கள். வரலாற்று நிபுணருக்கு பல கோணங்களில் ஆதாரங்கள் தேவைபடுகிறது. எதிராளிகளிடமிருந்து, விசுவாசிகளிடமிருந்து, எதிரிகளாக இருந்த இரண்டு இறை நம்பிக்கை இல்லாதவர்கள் இருக்கிறார்கள். யூதர்கள் காலியான கல்லறையை எற்றுகொண்டவர்கலாக இருக்காங்க. நல்ல சாட்சியாக கருதபடாத பெண்கள் இயேசு கல்லறைக்குள் சுற்றி வைக்கப்பட்டதையும் பிறகு அவர் அங்கு இல்லை என்பதையும் பார்த்தார்கள். அதாவது, இதுபோன்ற நிறைய பதிவுகள் இருக்கிறது, அதனாலதா கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள், ஏன்னா கிறிஸ்தவ விசுவாசத்தின் திறவுகோல் ஆதாரம் இதுதானே.

**Dr. ஆண்டனி பிழு** நா ஏற்கனவே சொன்ன விஷயத்தை கவனித்து பார்க்கலான்னு நினைக்கிறேன் உங்களுடைய முந்தைய நம்பிக்கை என்னவாக இருந்ததோ அதன் அடிப்படையில் நீங்கள் இதற்கு பிரதியுத்தரம் கொடுக்கும் விதம் இருக்கும் என்றேன். உங்களுடைய முந்தைய நம்பிக்கை யூதர்களின் நம்பிக்கையை போல இருந்தால், மேலசியா வருவார் என்றும் மோசேயின் கற்பனைகளின் பாரம்பரியத்தை சேர்ந்ததாக இருந்தால், இந்த காரியங்கள் எல்லாம் உங்களுக்கு யதார்த்தமாக தோன்றும் என்று சொல்வதற்கு பல காரணங்கள் இருக்கலாம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இருந்தாலும் இவர் தேவனுடைய குமாரன் என்று சொல்வது சிலருக்கு ஏற்றுகொள்ள முடியாத காரியமாக கானபப்டுகிறது. சரி, கென்ட் தனது புத்தகத்தில் சொல்லுகிறார் பவுல் புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் இயேசுவை தேவன் என்று சொல்லவில்லையாம். ஹேபர்மசுக்கு சவாளிடுகிறேன். இந்த விமர்சகர் சொல்கிறார், அதாவது, “இயேசுவை தேவன் என்று சொல்லுகிற இடத்தை காட்டுங்கள்..” இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என்று சொல்லிடும் ஐந்து நிலையான பதிவுகளை கொண்டிருக்கிறீர்கள் இல்லையா, மனுஷ குமாரன் என்று சொல்லும் ஐந்து நிலைகள உள்ளது. அதை பற்றி நீங்க சொல்ல விரும்புறீங்களா?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** இரண்டு பேருமே சொல்ல முடியும். பவுல் இயேசு தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்தார் என்பதற்கு தெளிவான ஆதாரங்கள் இருக்கிறது. ஆனால் பவுலினுடைய நாட்களுக்கு முன்பாகவே சில பதிகோல் இருக்கிறது. இன்றைக்கு மிகப்பெரிய கேள்வி என்னவென்றால் மேசியா என்பதை குறித்தது இயேசுவின் தனிபப்ட்ட கருத்து என்னவாக இருந்தது, அல்லது இன்றைக்கு மேற்கத்திய நாடுகளில் சொல்வது போல, அவர் தம்மை யார் என்று நினைத்தார்? விமர்சகர்கள் என்னசெய்கிறார்கள் என்றால், பவுலின் நிருபங்களை போல சுவிசேஷங்களில் அவர்களுக்கு ஆர்வம் இல்லை, அதை பலமுறை சொல்லியிருக்கிறோம். பவுலின் ஆதார்ணக்ள தான் சிறந்தது, ஆனால் சில இக்கட்டான காரியாய்ந்களுக்கு சுவிசெஷங்களிளின் பக்கங்களில் இருந்துதான் பதில்களை தேடுகிறார்கள். அந்த மாதிரி பல பகுதிகளில், இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என்றும் மனுஷ குமாரன் என்றும் சொல்லியிருப்பதை பார்க்க முடியும். ஒரே ஒரு காரியத்தை குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன், “மனுஷ குமாரன்” இதுதான் இயேசு தமக்கு கொடுத்துகொண்ட பட்டப்பெயர், அவர் அப்படி சொன்னதை தானியேளில் இருந்து

எடுத்துகொண்டிருக்கிறார் தானியேல் 7:13-14 அவர் தானியேல் 7:13-14ஐ இங்கு சுட்டி காட்டுகிறார் பிரதான ஆசாரியர் முன்பாக நிற்கும் இரண்டு முறையும் இதை சொன்னார்.

சரி, இன்னொரு உதாரணம். அவர் மரிபதற்கு ஒரு காரணம் இருக்கனும். ரோமர்கள் செய்த காரியத்தை எதற்காக அவர்கள் செய்தார்கள்? யூதர்கள் ஏன் ரோமர்கள் இதை செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள்? மாற்கு 14:61-64 பிரதான ஆசாரியர் கேட்க்கிறார், “நீர் கிறிஸ்துவா, உன்னதமான தேவனுடைய குமாரனா? இதை, கவனிங்க, இந்த கேள்வி, “நீர் தேவனுடைய குமாரனா?” அதற்கு இயேசு கிரேக்கத்தில் சொல்கிறார், ஈகோ ஈமீ. அவர் சொன்ன முதல் வார்த்தை, நான் அவர்தான். இரண்டாவது, தேவனுடைய குமாரனா என்ற கேள்வியை மனுஷ குமாரன் என்ற பதிலினால் முடித்தார். அவர் சொன்னார், “இதுமுதல் மனுஷகுமாரன் மேகங்கள் மீது வருகிறதை காண்பீர்கள் அவர் உங்களை நியாயந்தீர்ப்பார் என்று கூறினார்.”

இப்ப, பிரதான ஆசாரியன் என்ன சொல்லியிருக்கனும், “ஆ, இல்ல. நீ உன்னை மனுஷ குமாரன்னு சொல்றே. நீ தேவனுடைய குமா ரனான்னுதா நா கேட்டேன்...” இல்ல. இயேசு தம்மை மனுஷ குமாரன் என்று சொன்னதை அவன் கேட்டான் அது அவருடைய தெய்வத்துவத்தை குறிக்கிறது என்பதை உணர்ந்துகொண்டான். அது மட்டுமில்லை, அந்த பகுதி, “மேகங்கள் மீது வருகிறார், “ இந்த வார்த்தைகள் வேதாகமத்தில் பல முறை சொல்லப்பட்டு இருக்கிறது அது எப்போதும் தேவனை மட்டும்தான் குறிக்கிறது. அதனால இயேசு சொல்கிறார், “ஆம், நான் அவர்தான், தேவனுடைய குமாரன்தான். அவர் சொல்கிறார், “நான் மனுஷ குமாரன். நான் நியாயந்தீர்க்க வருவேன். அந்த சமயத்தில் பிரதாக ஆசாரியன் சொல்லுகிறேன், “இதற்கும் மேல் நமக்கு என்ன வேண்டியதாக இருக்கிறது. நீங்க எல்லாரும் கேட்டீர்களே. இவன் தேவ தூஷணம் சொல்லுகிறான். சோ, இதுவும் ஒரு உதாரணம்தான்.

நிறைய மேதைகள் சொல்லியிருப்பார்கள், மத்தேயு லூக்காவில் உள்ள பகுதிகள் மாற்குவில் சொல்லப்படவில்லை என்பார்கள். அதை பற்றி நீங்கள் பார்க்க வேண்டும், எல்லாம் சுவிசேஷங்களில் தான் இருக்கிறது. அந்த பகுதிகளில் ஒன்றில்தான், மத்தேயு 11:27 அது லூக்காவிலும் சொல்லப்பட்டு இருக்கிறது (லூக்கா 10:22) இயேசு

சொல்கிறார், “பிதாவை தவிர குமாரனை ஒருவனும் அறியான் குமாரன் எவனுக்கு தம்மை வெளிபடுத்த சித்தமாயிருக்கிறாரோ அவனைத்தவிர வேறொருவனும் பிதாவை அறியான்.” மாற்கு13:32, அவர் தம்மை மனுஷ குமாரன் என்கிறார். விமர்சகர்கள் இதை விளக்குவதற்கு கடினமாக உணர்வதற்கு காரணம், என்னவென்றால், வரலாற்றாளர்கள் இதை தம்மை மேம்படுத்தி கூறுகின்ற கூற்றுகளாக கருதுகின்றனர். இயேசு சொல்கிறார், “அந்த நாளையும் நாழிகையையும் பிதா ஒருவர் தவிர குமாரன் உட்பட வேறொருவரும் அறியார்கள்.

சரி, ஒருவேளை நீர் உம்மை மனுஷ குமாரன் என்று சொன்னால், பிறகு ஏன் சில காரியங்கள் எனக்கு தெரியாது என்று சொல்லனும்? அது வியர்த்தமானதாக இருக்கிறது . ஒரு பிரிட்டிஷ் இறையியலாளர் சொன்னார், “இயேசு தம்மை மனுஷ குமாரன் என்று சொன்னார் என்பதை நிரூபிக்க சபை முயலுமானால், அவர் அதை மட்டும் தான் சொல்லிக்கொண்டு இருப்பார். அவருடைய வருகையின் காலம் அவருக்கு தெரியாது

என்று நீங்களே சொல்லி பிரச்சனையை உண்டாக்க வேண்டாம்.” இந்த பகுதியில் அவர் தம்மை மனுஷ குமாரன் என்று சொல்லுகிறார்.

இயேசு தம்முடைய தெய்வத்துவத்தை குறித்து நினைத்த சில காரியங்களை இங்கே பார்க்கிறோம். பவுல் இயேசுவின் தெய்வத்துவத்தை தெளிவாக கூறியிருக்கிறார். சில இடங்களில் அவரை தேவன் என்று சொல்லுகிறார் மேலும் அவருகுசொள்ளப்படும் தலைப்புகள் கர்த்தர் மற்றும் கிறிஸ்து. துரிதமாக சொல்ல விரும்புகிறேன், கர்த்தர், இதை மொழிபெயர்ப்பின்படி பார்க்கும்போது, பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில், கர்த்தர் என்பது எஹோவாவிற்கு சொல்லப்பட்டு இருக்கிறது. அப்ப பவுல், இதை எடுத்து சொல்லும்போது, அதை அவர் தெரிந்திருக்க வேண்டும் அதனாலதான் இயேசுவை கர்த்தர் என்று தொடர்ந்து சொல்லீட்டே இருக்கார்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** நம்மகிட்ட நிறைய நேரமில்லை. இதை சுருக்கமாக சொல்லுங்க அடுத்த பகுதியில் டோனியிடம் பேச விரும்புகிறோம் இது எல்லாவற்றையும் குறித்து நீங்க என்ன நினைக்கிறீங்கன்னு சொல்ல போறீங்க. ஒரு நாத்திகருக்கு இந்த ஆதாரங்கள் போதுமானதாக இருக்குமா? சரியா? இப்ப இந்த காரியங்களை பார்த்து முடிக்கலாம், சரியா, தேவனுடைய குமாரன், மனுஷ குமாரன்” அப்படியிருந்தால், அடுத்து உயிர்த்தெழுதல் இருக்கிறது, இது இரண்டையும் ஒன்றாக இணைக்க முடியுமா, அதை பற்றி சொல்லுங்க?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, கேளுங்க. இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என்று சொல்லுகிற சில வசனங்களை விமர்சகர்கள் கூட ஏற்றுகொள்ளுகிறார்கள் என நினைக்கிறேன். அவர் தம்மை மனுஷ குமாரன் என்று சொலுகிற சில குறிப்பிட்ட வசனங்கள் இருக்கிறது. பவுல்தான் முதல் சாட்சி, அவர் இயேசுவை தேவ குமாரன் என்கிறார், அவரை கர்த்தர் என்று சொல்லுகிறார், அவரை கிறிஸ்து என்று சொல்லுகிறார். சொல்லப்போனால், ரோமர் 1- மொன்று நான்கு வசனங்களில் உயிர்த்தெழுதல் எல்லாவற்றையும் நிரூபிக்கிறது என்று பவுல் சொல்லுகிறார். அதைதான் நீங்க சில நிமிடங்களுக்கு முன்னால சொன்னீங்க. ஆமா, புதிய ஏற்பாட்டில் உயிர்த்தெழுதல் என்பது இயேசு தம்மை குறித்து நினைத்தது சரிதான் என்று இயேசு முத்திரையிடுவதற்கு ஒப்பாக இருக்கிறது. இங்க, அதாவது, எங்களோட 1985ன் விவாதத்தில், டோனி ஒன்று சொன்னார் இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்திருந்தா, அவர் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கு இஸ்ரவேலின் தேவனாக இருக்கிறார் என்பதற்கு சிறந்த உதாரணமாக இருக்கும் என்று சொன்னார். இது மிக நெருக்கமான ஒரு வாக்கியம் என்று நினைக்கிறேன். நிச்ஹ்ச்யமா, அவருக்கு உயிர்த்தெழுதலில் நம்பிக்கை இல்லை, ஆனா என்ன சொல்றேன்னா, உயிர்த்தெழுதல் சம்பவித்திருந்தால், இயேசு தேவனுடைய குமாரன் ஒரே தேவன் எண்ட்ச்று ஜனங்கள் நம்புவதற்கு இந்த ஒரு காரணம் மட்டும் போதுமே, அந்த கண்ணோட்டம், தேவன் மட்டும்தான் மரித்தோரை எழுப்ப முடியும் அவர் இந்த நபரை எழுப்பியிருக்கிறார், அவர் சாதாரணமான ஒருவர் இல்லை. அவர் தம்மை குறித்து சொன்ன அனைத்தும் சத்தியம் தான்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், இன்றைக்கு நாம் இந்த பகுதியோடு நிறைவு செய்கிறோம் மீதமுள்ளவைகளை அடுத்த பகுதியில் பார்க்க இருக்கிறோம். ஒரு இறை

நம்பிக்கை இல்லாதவர் எந்த காரியத்தை கவனிக்க விரும்புகிறார் என்பதை பார்க்க இருக்கிறோம், வேறுவிதமாக சொன்னால் இந்த ஆதாரங்கள் எதை நோக்கி செல்கின்றனர், எங்கு நடத்துகிறது, நீங்க இயேசுவை விசுவாசிக்கும்படி செய்கிறதா? ஆல்ரைட்? அடுத்த பகுதியில் இதை பற்றிதான் பேசிட இருக்கிறோம்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.